2002 ஏப்ரல் 24] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாடு அரசிற்கு இதில் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெகுவாக அந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவருடைய கருத்தை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலம் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கும், மத்திய அரசிற்கும் இதில் இருக்கின்ற இடர்ப்பாடுகளைக் களைய வேண்டுமென்று நாம் சொல்லி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-30

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறு முதல் அறுபத்து இரண்டாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002-2003 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் மானியக் கோரிக்கை எண் 21 உள் துறை - காவல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை - காவல் மானியக் கோரிக்கை எண் 21-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ,11,70,32,19,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,67,69,15,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.